வரும்போது எறிந்துவிடுமானால் அதனுடைய கெடுதல் தன்மை குறைந்துவிடுகிறது. ஆகவேதான் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற் சாலையில் உள்ள ஒரு பெரிய சிம்னியில் எப்போது பார்த்தாலும் இரவு நேரத்திலும், பகல் நேரத்திலும் தொடர்ந்து எறிந்து கொண்டிருக்கிற காட்சி காணப்படுகிறது. ஆனால் இவ்வளவும் போதாமல், இதற்கு மேலும் என்னென்ன செய்வதன் மூலம் காற்றிலே கலக்கக் கூடிய அத்தகைய சக்தியுடைய நச்சு வாயு சேராமல் இருக்கும் என்பது மிகவும் தொழில் நுணுக்கத்தோடும், விஞ்ஞான அறிவோடும் அணுகப்பட வேண்டிய ஒன்று. அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

Fishing near Pulicat Area

*246 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of Thiru **V. ISVARMURTI**): **Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—**

(a) whether the State Government and the Andhra Government have agreed on a joint venture for fishing near Pulicat area; and

(b) if so, the details thereof?

பழவேற்காடு பகுதியில் மீன் பிடிப்பு

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பழவேற்காடு பகுதியில் மீன் பிடிப்பதற்காக கூட்டு முயற்சி மேற்கொள்ள இம்மாநில அரசும் ஆந்திர அரசும் உடன் பாடு செய்து கொண்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இல்லை.

Salt Industry at Vedaranyam in Thanjavur district

*247 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of Thiru **V. ISVARMURTI**): **Will the Hon. the Minister for Industries be pleased to state—**

(a) whether the Government are aware of the languishing of the salt industry at Vedaranyam in Thanjavur district; and

(b) if so, the steps taken to improve the production of salt?

1972 ஆகஸ்ட் 24]

தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யத்தில் உள்ள உப்புத் தொழில்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், வேதாரண்யத்தில் உள்ள உப்புத் தொழில் நசித்து வருவது பற்றி அரசு அறியுமா?

(இ) ஆமெனில், உப்பு உற்பத்தியை மேம்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் வேதாரண்யத்திலும் மற்றப் பகுதிகளிலும் இயங்கி வரும் உப்புத் தொழிற்சாலைகள் போதுமான உப்பு நீர் கிடைக்காததாலும், உற்பத்தி செய்யப்பட்ட உப்பை மற்ற பகுதிகளுக்கு அனுப்பப் போதுமான இரயில் வாகனங்கள் (Wagons) ஒதுக்கப்படாததாலும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

(இ) வேதாரண்யத்திலும் மற்ற பகுதிகளிலும் இயங்கி வரும் உப்புத் தொழிற்சாலைகட்குத் தேவையான உப்பு நீரைக் கொண்டு வரும் கால்வாய்களைத் தூர் எடுப்பதற்கும், கரைகளை வலிவுபடுத்தி உப்பு நீர் வழிந்தோடாமல் தடுத்து மராமத்து செய்வதற்கும் உப்புத் துறையால் உப்பு செஸ் நிதி உதவியுடன் நடவடிக்கை மேற்கொள்ளக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. உற்பத்தியான உப்பை மற்ற பகுதிகளுக்கு அனுப்பும் வகையில் போதுமான இரயில் பெட்டிகள் (Wagons) ஒதுக்க தென் இரயில்வே நிர்வாகத்தினரைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

THIRU G. VASANTHA PAI: Is the Hon. Minister aware that two main persons who do this salt industry business in Vedaranyam are the Mettur Chemicals and Wimco? They own the largest acres of land in that place. Besides these two, there are only a few others who are manufacturing salt illicitly without paying sales cess to the Central Government. Among these, I understand that Wimco are about to give over their lands to the other—namely, the Mettur Chemicals. If that is so, I think there are better prospects for developing industry, because I understand that the Mettur Chemicals have increased their production of salt from the original state in which it was. Now they have brought 2,000 acres under cultivation. Will the Government consider taking

unused land from Wimco and making it over to this industry in the interest of the caustic soda industry in our State?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விம்கோ நிறுவனத்தினர் நீண்ட நாட்களுக்கு முன்ஞல் ஏராளமான நிலத்தைக் கொடுத்திருந் தார்கள். இந்த அரசாங்கம் பொறுப்பேற்றவுடன் அவர்கள் நம்மிடத்திலே நிலங்களேக் கொடுத்தார்கள். அதை எப்படிப் பண் பாடு செய்வது என்று யோசனே செய்து வருகிரேம். விம்கோ நிறுவனத்தினர் இன்னெரு நிர்வாகத்தின் மூலமாக இன்னெரு தொழிற்சாலேயை ஏற்படுத்துவதற்கு அனுமதி கேட்டிருக்கிருர்கள். அந்த அனுமதியும் கொடுப்பது என்று அரசு யோசித்து வருகிறது.

D.C.R. Unit at Vyasarpadi

* 248 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether a workshop of D.C.R. Unit, Public Works Department is situated at Vyasarpadi, Madras;

(*b*) whether that workshop is registered under Factories Act;

(*c*) whether that workshop is maintained in accordance with the provisions of the Act; and

(*d*) the present status of the workshop and its functions?

டி.சி.ஆர். பணிமனே, வியாசர்பாடி

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) பொதுப் பணித் துறையின் டி.சி.ஆர். பிரிவுக்கான பணி மனே ஒன்று சென்னே வியாசர்பாடியில் உள்ளதா?

(இ) அப்பணிமனே தொழிற்சாலேகளின் சட்டப்படி பதிவு செய்யப்பட்டதா?

(உ) அப்பணிமனே சட்டப்படி இருக்க வேண்டிய நிலேயில் வைத்து பராமரிக்கப்பட்டு வரப்படுகிறதா?

(எ) அதன் தற்போதைய நிலே என்ன? பணி என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ), (இ) & (உ) ஆம்.